மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கேரளாவுக்கு அனுப்பப்படுகிற பெரும்பாலான மாடுகள் அடிமாடு களாகத்தான் அனுப்பப்படுகின்றன. அடிமாடுகள் எண்ணிக்கை யிலே குறைவதாலே எந்த அளவுக்கு மக்களுக்குப் பலன் வளரும் என்பதையும் பார்க்கவேண்டும். நாம் கேரளாவுக்கு அனுப்பக் கூடாது என்று சொல்வதைக் காட்டிலும் மாட்டு இறைச்சியைப் பக்குவப்படுத்துகின்ற தொழிற்சாலையை அமைக்க இங்கே யாராவது முன்வந்தால் இங்கேயே அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். எனவே இதற்கிடையே இங்கேயிருந்து அங்கே அனுப்பக்கூடாது என்ற கருத்தை மட்டும் வலியுறுத்துவது பொருத்தமானதல்ல.

திரு. கே. டி. கே. தங்கமணி : இரண்டாயிரம் மாடுகள் அனுப்பப்படுகின்றன. அவைகள் அடிமாடுகள்தானு என்று பரிசோதிப்பதற்கு ஏதாவது ஏற்பாடு உண்டா? சில சமயங் களிலே நல்ல மாடுகள் அனுப்பப்படுவதைக்கூட எங்களாலே பார்க்க முடிகிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நல்ல மாடுகளாக இருந்தால் தகுந்த விலை கொடுத்துத்தான் வாங்கிப் போவார்கள். மேல் நாடு களில் இப்படிப்பட்ட மாடுகளை இறைச்சிக்காக என்றே வளர்த்து இறைச்சித் தொழிற்சாலைக்கு அனுப்பி பக்குவப்படுத்தி விடுகிறார்கள். இங்கே நாம் இறைச்சியைப் பக்குவப்படுத்துகின்ற தொழிற்சாலையைப் பெறுததாலே கேரளாவுக்கு அனுப்பப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. இதனாலே மாடுகள் வளர்ச்சிக்கு எந்த விதமான நஷ்டமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனாதைகளின் சவ அடக்கம்.

* 357 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அனாதைகளின் சவ அடக்கத்திற்கு உதவி செய்ய திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அனாதைகளின் சவ அடக்கத்திற்கு உதவிசெய்ய முன்னதாகவே அரசு ஆணை பிறப்பித்துள்ளது, அங்கங்கேயுள்ள ஊராட்சிமன்றங்கள்,

1972 மார்ச் 8]

நகராட்சி மன்றங்கள் இவைகளின் மூலமாக அநாதை சவ அடக்கம் ஏற்பாடு செய்யப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அநாதைகள் சவ அடக்கம் செய்யும் பொறுப்பினை செஞ்சிலுவைச் சங்கம் போன்ற பொது நிறுவனங்களிடம் ஒப்படைக்கும் செயற்குறிப்பு அரசாங்கத்திடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவா அவர்களே, அநாதைகளுடைய சடலங்களை இப்படி அடக்கம் செய்வதோ அல்லது எரிப்பதோ ஆகிய கடமைகளை பொது நிறுவனங்கள் மேற்கொள்கின்றபொழுது அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை ஒன்றும் இல்லை. ஆனால் யாரும் வரமுடியாதபோது நகராட்சிகள், ஊராட்சிகள் தலையாரிகள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றி ஆகவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 358-ம் 359-ம் மாண்புமிகு தொழிலாளர்நலத் துறை அமைச்சா அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒற்றிவைக்கப்படுகின்றன.

மீன் எண்ணெய் உற்பத்தி,

***360 வினா—திரு. என். கிட்டப்பா :**

திரு. **கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் மீன் எண்ணெய் தயாரிக்க அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மீனளத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சுறா ஈரலெண்ணெய் எடுக்கும் நிலையங்களில் சுறா ஈரலெண்ணெய் எடுக்கப்படுகிறது. இது தூய்மைப்படுத்தப்படாத எண்ணெயாகும். இம்மாநிலத்தில் இத்தகைய நிலையங்கள் ஏழு உள்ளன. 1970–71-ஆம் ஆண்டில் இந்த நிலையங்களில் 9,127 கிலோ கிராம் தூய்மைப்படுத்தப்படாத எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டது ; ரூ. 26,035 மதிப்புள்ள எண்ணெய் விற்கப்பட்டது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மீன் எண்ணெய் உள் நாட்டுத் தேவைகளை நிறைவேற்றுவதோடு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதால்